கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விவரங்கள் இப்போது இங்கு இல்லை.

Striking of oil at Nagercoil

* 175 *Q*.—Sri V. SANKARAN: Will the Hon. Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact oil has been struck in two wells near the State Bank Building at Nagercoil;

(*b*) if so, whether any analysis of the samples was made; and

(*c*) the results thereof?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

தேசீய கீதம்

* *176* **கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைக் கூட்டங்களின் இறுதியில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என மதுரை நகரசபை அண்மையில் ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) நகரமன்றக் கூட்டங்களின் இறுதியில் தேசீய கீதம் பாடுவது உசிதமல்ல என்று சர்க்கார் நகரமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, அப்படி இருக்கிற போது சினிமாக் காட்சிகள் முடிவுறும்போது கட்டாயமாகத் தேசீய கீதம் பாடப்படவேண்டும், அதைக் கேட்டுத்தான் வெளியேற வேண்டும் என்று உத்தரவு பிறப்பிப்பானேன்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நகர மன்றங்கள் ரூட்டின் மாட்டர்சுக்காகக் கூடுகிறார்கள். சட்ட மன்றங்களிலே, பாராளு மன்றத்திலே, மேல் சபையிலே எல்லாம் நிகழ்ச்சிகளுக்காகக் கூடுகிறார்கள். பொது மக்கள் கூடும் இடங்களில் மக்களுக்குத் தேசீய உணர்வை ஏற்படுத்துவதற்காக, மக்களுடைய பண்பாட்டுக்காகக் கொண்டுவருவதை ஒப்பிடுவது முறையல்ல.